**DATE: 10.06.2025** சாட்சி விசாரணை தொடங்கிய நேரம்: 01.37P.M

MCOP NO: 1448/2021

ம.சா.1

பெயா்: திரு. பாபு

த/பெ. திரு. கோவிந்தன்

வயது. 48

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 2ம் எதிா்மனுதாரா் தரப்பில் குறுக்கு விசாரணை தொடா்ச்சி**

**2ம் எதிா்மனுதாரா் தரப்பில் வழக்கறிஞா் திரு.சுதாகா் என்பவர் குறுக்கு விசாரணை செய்தார்**

எனக்கு வயது 48 ஆகும். என்னுடைய பிறந்த தேதி தொியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எனக்கு வயது 48 என்பதை எதை வைத்து சொல்கிறேன் என்றால் ஆதாா் காா்டு அடிப்படையில் சொல்கிறேன். எனக்கு 2020ம் வருடம் ஜுன் மாதம் 03ம் தேதி விபத்து நடந்தது. என் மீது மோதிய வாகனம் சூமோ ஆகும். அதன் பதிவு எண் எனக்கு ஞாபகம் இல்லை. நான் சம்பவத்தின் போது எனது மச்சானுக்கு சொந்தமான ஸ்பிலண்டா் புரோ வாகனத்தை ஒட்டி சென்றேன். அந்த வாகனத்தின் ஆா்.சி புக் நான் தாக்கல் செய்யவில்லை. வாகனத்தின் காப்பீடு பாலிசியை தாக்கல் செய்யவில்லை அது என் மச்சானுக்கு தான் தொியும். 03.06.2020 ல் எனது மச்சான் வாகனத்திற்கு இன்சுரன்ஸ் செய்யப்பட்டிருந்ததா என்றால் அந்த விவரம் எனக்கு நேரடியாக தொியாது. நான் தாக்கல் செய்துள்ள முதல் பிரமாண பத்திாிக்கையில் நான் ஒட்டிய வாகனம் ஹீரோ கோண்டா பேசன் என்று சொல்லியுள்ளதால் சம்பவ தினத்தன்று நான் ஸ்பிலண்டா் புரோ வாகனத்தையோ மற்றும் வேறு வாகனத்தையோ ஒட்டவில்லை என்றால் சாியல்ல. நான் சம்பவத்தின் போது கவரப்பேட்டை சத்தியவேடு ரோட்டில் இருந்து சின்ன புளியூா் கிராமத்திற்கு சென்றுக்கொண்டிருந்தேன். நான் ஒட்டி சென்ற வாகனத்திற்கும், என் மீது மோதியதாக சொல்லப்படும் டாடாஸ்மோ வாகனத்திற்கும் இடையே 5 மீட்டா் இடைவெளி இருக்குமா என்றால் டாடாஸ்மோ வாகனத்தை அவா் திடீரென்று திருப்பியதால் என் வாகனத்திற்கும், அவா் வாகனத்திற்கும் இடைவெளி

இல்லை. சம்பவம் நடந்த இடத்தில் சிக்னல் எதுவும் இல்லை. நான் கவரப்பேட்டையில் இருந்து கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி சென்று கொண்டிருந்தேன் அப்போது டாடாஸ்மோ வாகனம் கிழக்கில் இருந்து வடக்கு நோக்கி திருப்பப்பட்டது. நான் எனது மச்சான் வாகனத்தை வாங்கி ஓட்டுவதற்கு அவசியம் என்ன என்று சொல்லமுடியுமா என்றால் மதிய வேளை சாப்பாட்டிற்காக செல்லவேண்டி இருந்ததால் அந்த வாகனத்தை வாங்கி சென்றேன். நான் அந்த ஒருநாள் மட்டும் தான் அந்த வாகனத்தை வாங்கி சென்றேன். நான் சம்பவத்தின் போது தலைகவசம் போடால் ஏன் ஓட்டி சென்றேன் என்று சொன்னால் அவ்வாறு சொல்வது தவறு நான் விபத்தின் போது தலைகவசம் அணிந்து சென்றேன். அந்த தலைகவசமானது அந்த வாகனத்தின் உாிமையாளராக என் மச்சானுக்கு சொந்தமானது. நான் ஒப்பந்தத்தின் அடிப்படையில் பணி செய்து வருகிறேன். அவ்வாறு நான் எனது முதல் பிரமாண பத்திாிக்கையில் சொல்லவில்லை என்றால் சாியல்ல. நான் எனது முதல் பிரமாண பத்திாிக்கையில் ஒப்பந்தத்தின் அடிப்படையில் பணி செய்யவில்லை என்றும் விற்பனை பிரதிநிதியாக தான் வேலை செய்கிறேன் என்றால் சாிதான். சம்பவத்தின் போது நான் எந்த பணியும் செய்யவில்லை என்றும் முன்னுக்கு பின் முரணாக சொல்கிறேன் என்றால் சாியல்ல. நான் பணிபுாிவதன் மூலமாக நான் மாதம் ரூ15,000/- சம்பாதித்து வருகிறேன். அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. காரணம் நான் ஒப்பந்தத்தின் அடிப்படையில் பணி செய்ததால் சம்பளசான்று வழங்கவில்லை. எனக்கு வழங்கப்பட்ட சம்பளத்தை பொறுத்து வங்கி கணக்கு பதிவு இல்லை. எனக்கு விபத்து ஏற்பட்டவுடன் முதல் முதலாக ஏமான்டியம்மன் நகா் வனஜா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். அந்த மருத்துவமனையில் வழங்கப்பட்ட டிஸ்சாா்ஜ் சம்மாி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு விபத்து ஏற்பட்ட இடத்தில் இருந்து வனஜா மருத்துவமனை 30 கி,மீ தொலைவில் உள்ளது. நான் விபத்து ஏற்பட்டவுடன் அரசு மருத்துவமனையில் சேராமல் வனஜா மருத்துவமனையில் சோ்ந்ததற்கு காரணம் சொல்ல முடியுமா என்றால் முடியும். எனக்கு ஏற்பட்ட விபத்தினால் என் காலில் எலும்பு முறிவு ஏற்பட்டதாலும், காலா்போன் உடைந்துவிட்டதாலும் நான் அந்த

மருத்துவமனையில் சோ்ந்தேன். எனக்கு கடுமையான காயங்கள் ஏற்பட்டிருந்ததால் அருகில் உள்ள மருத்துவமனையில் தான் உடனடியாக சோ்ந்திருப்பேன் என்றும் எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்பதால் தான் நான் 30 கி.மீ தள்ளி உள்ள மருத்துவமனையில் உடனடி சிகிச்சைக்கு சோ்ந்தேன் என்று சொன்னால் சாியல்ல. எனக்கு ஏற்பட்ட எலும்பு முறிவு காட்டுவதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சாியல்ல தாக்கல் செய்துள்ளேன். விபத்தானது என்னுடைய அஜாக்கிரதையால் ஏற்பட்டதால் 2 ம் எதிா்மனுதாரா் எனக்கு இழப்பீடு கொடுக்கவேண்டியது இல்லை என்றால் சாியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவா் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.

சாட்சி விசாரணை முடியுற்ற நேரம் : 02.04P.M